1969 செப்டம்பர் 12]

திரு. க. ர. நல்லசிவன் : மழை காலத்தில் வீணாகக் கூடிய தண்ணீரைச் சேமித்து வைத்து மீண்டும் புதிய பகுதிகளுக்குப் பாசன வசதி கொடுக்கும் திட்டம் இதற்குள்ளே இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தகவல் இல்லை.

திரு. கே. பி. எஸ். மணி : தஞ்சை ஜில்லாவில் சீர்காழி கடைசி தாலுக்காவாக இருப்பதால் சீர்காழி தாலுக்காவுக்கும், தென்னாற்காடுக்கும் இணைந்த ஒரு எஸ்.இ. இருப்பதால் இரட்டை ஆட்சி முறை இருந்து சிக்கல் அளிப்பதாக இருக்கிறது. ஆகவே, சீர்காழிக்கு ஒரு தனி ஏ.இ. நியமிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இரட்டை ஆட்சி முறை இருப்பதாகச் சொல்லுவதற்கில்லை. ஒரு அதிகாரியின் ஆட்சிதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்களுடைய கோரிக்கையைப் பொறுத்தவரை ஏற்கனவே பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

திரு. நா. காசிராமன் : தஞ்சை ஜில்லாவில் காவிரி டெல்டாவில் கடைமடைப் பகுதியில் மட்டுமல்லாமல் மேல் பகுதியிலும் கும்பகோணம் தாலுகாவில் வடிகால் சரியாக இல்லாமல் இருக்கிறது. அங்கு வடிகாலைச் சரி செய்து விவசாயிகளுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றியும் பரிசீலிக்கப்படும்.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : தஞ்சை மாவட்டத்தில் கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் பாயாமல் இருப்பதோடு மேற்குப் பகுதிகளில் வசதி படைத்தவர்களுக்காக 'பெட்டாம்' கட்டப்பட்டு தண்ணீர் பாய்வதால் கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் போவதில்லை. இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வடிகால் வசதிபற்றிய கேள்வி. தண்ணீர் வராதது பற்றியதல்ல.

எரும்பூர் ஏரியிலிருந்து வடிகால்

* 252 வின.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் தாலுக்கா வளையமாதேவி கிராமத்தில் மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கி போக்குவரத்து தடைப்படுவதுடன் அரிசனத் தெருவையும் நஞ்சை நிலங்களையும் பாழ்படுத்தி வருவதைத் தடுக்க எரும்பூர் ஏரித் தண்ணீர் தாராளமாகப்போகும் படி ஒரு கலுங்கு (வடிகால்) கட்டிக் கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம். அது நிர்வாகப் பொறியாளரின் ஆராய்ச்சியில் உள்ளது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இந்தப் பிரச்சினை ரொம்ப நாட்களாக இருந்து வருகிறது. மழைக்காலங்களில் போக்குவரத்து தடைப்பட்டு விடுகிறது, பஸ் போக்குவரத்து தடைப்பட்டு விடுகிறது. ஏரியின் பக்கத்தில்தான் ஹரிஜனத் தெரு இருக்கிறது. அவர்களுக்குள்ள கொஞ்சநஞ்ச நிலங்களும் அங்குதான் இருக்கின்றன. மழை பெய்தால் தண்ணீர் வடிவதற்கு ரொம்ப நாட்கள் ஆகின்றன. ஆகவே, அரசாங்கம் இதில் உடனடியாகத் தலையிட்டு அங்கு ஒரு கலுங்கு கட்டிக் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த ஏரியின் பெயரே எரும்பூர் ஏரி, எறும்பு ஊறுவதுபோல் இருக்கிறது. இப்போது வேகமாக நடவடிக்கைகள் எடுக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 253, 254, 255, 256, 257, 258, 259, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டு கோள்படி, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். கேள்வி எண் 260.

THIRU K. VINAYAGAM: On a Point of Order, Sir. I want some clarification. The Hon. Minister is present here in full flesh and blood, in his wholesome capacity. Questions have been tabled and they are in the Agenda. Members are eager to know the answers. When such is the case, why should the Hon. Minister refuse to answer the question?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிறகு எடுத்துக்கொள்ளப் படும், மறுக்கவில்லை.

திரு. கே. விநாயகம் : பிறசென்றால் ?
At the end of question-hour?

Mini-buses

* 260 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) Whether mini-buses are being introduced by the State Transport Department;

(*b*) the places where they are introduced;

(*c*) the cost of the manufacture of these buses; and

(*d*) the passenger capacity?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) முதல் (எ) வரை : இவ்வினாக்களுக்கு இடமில்லை.